# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1685 - 2010 දෙසැම්බර් මස 17 වැනි සිකුරාදා - 2010.12.17

*1685 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1928 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1929 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுகளுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமான தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, தை மாதம் 18 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2010, கார்த்திகை 25.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | நீர்கொழும்பு | நீர்கொழும்பு நகரத்தின் அளுத்குரு கோரளை வடக்குப் பிரிவின் விவாகப் (பொது) பதிவாளருக்குமான பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக மாவட்ட பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கம்பஹா |

12-565

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

## இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2009 (2010)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1,680 ஆம் இலக்க 2010.11.12 ஆந் திகதிய வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப் பட்டுள்ள அறிவித்தலின் 01, 10 மற்றும் 14 ஆகிய பந்திகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன :

1. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சேவையில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை 2011, பெப்புருவரி மாத ஆரம்பத்தில் பேராதனையில் நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதிக்கு கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

10. விண்ணப்பப்பத்திரங்கள் 2010.12.31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்குக் கிடைக்கக்கூடியதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
கெட்டம்பே, பேராதனை.

14. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்பட வுள்ளன :

(அ) முதல் அமர்வு முழுப்பரீட்சை அல்லது ஒரு பகுதி கட்டணம் அறவிடப்பட மாட்டாது ;
(ஆ) இதன் பின் ஒவ்வொரு அமர்வுக்குமாக-

முழுப் பரீட்சைக்கு - ரூபா 400
ஒரு பாடத்திற்கு - ரூபா 200

இப்பரீட்சைக்கு ஏற்கனவே தோற்றியுள்ள பரீட்சார்த்திகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றார்கள். இப்பரீட்சைக் கட்டணம் "பரீட்சைகள் ஆணையாளரது வருமானத் தலைப்பு 2003-02-13" இற்கு செலவு வைக்குமாறு தீவில் அமையப் பெற்றுள்ள எந்தவொரு தபால் பணிமனையிலும்/மாவட்ட அல்லது பிரதேச செயலாளர் பணிமனையிலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டவும். மேலும் அதன் ஒளிப் பிரதியை வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும்.

ஏ. எச். கமகே,
செயலாளர்,
கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு.

கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு,
இல. 45, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 3.
2010.11. ......

12-465

## நிதி, திட்டமிடல் அமைச்சு

இலங்கைச் சுங்கத் திணைக்களம்

## இலங்கை சுங்கத் திணைக்களத்தின் சுங்க காவலர் தரம் - III ஆம் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2010

இலங்கைச் சுங்கத்திணைக்களத்தின் சுங்க காவலர் தரம் - III ஆம் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சையொன்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2010, மாச்சு மாதத்தில் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படவுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதியானது பத்திரிகைகள் மூலம் உரிய காலத்தில் அறிவிக்கப்படும். இப் பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை சுங்கத் திணைக்களம் கொன்டுள்ளது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இரு பாலாரிடமிருந்தும் இப்பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

**2. தகைமைகள் :**

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தாம்-

(அ) இலங்கைப் பிரஜையாகவும் ;
(ஆ) மிகச் சிறந்த ஒழுக்கமுடையவராகவும் ;
(இ) விண்ணப்பமுடிவுத்திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 22 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(ii) உடற் தகைமைகள்.- ஆண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 5 அங்குலங்களுக்கு குறையாமலும் மார்புச் சுற்றளவு (விரிவடைந்த நிலையில்) 33 அங்குலங்களுக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

பெண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 3 அங்குலங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

(iii) கல்வித் தகைமைகள்.- விண்ணப்பதாரிகள் பின்வரும் கல்வித்தகைமைகளை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(அ) கல்விப் பொதுத்தராதர (சாதாரணதர) சான்றிதழ் பரீட்சையில் ஒரே தடவையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி, கணிதம், மற்றும் ஆங்கில மொழி ஆகியவற்றில் திறமைச் சித்தி அடங்கலாக ஆறு பிரதான பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**3. சேவை நிபந்தனைகள்**.- சுங்க காவலர் தரம் - III இற்கான ஆட்சேர்ப்புக்குரிய தகைமையினை பரீட்சிப்பதற்காக பரீட்சார்த்திகளை அழைக்கும் சந்தர்ப்பத்தில், அடுத்துவரும் ஆறு மாத காலத்திற்கு சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற இடம் ஒன்றிற்கு பரீட்சார்த்திகள் தனது பணி பயிலும்படியான பயிற்சியொன்றிற்கு சமுகமளிக்க வேண்டும். இப்பயிற்சிக் காலப்பகுதியினுள் கொடுப்பனவொன்று வழங்கப்படும் (ஆனால் சம்பளம் வழங்கப்பட மாட்டாது.) பயிற்சி முடிவின்போது எரி கருவிகள் பாவனை, எதிர்த்துத் தாக்கும் முறைகள் மற்றும் தற்பாதுகாப்பு ஆகியவைகளில் பரீட்சார்த்திகள் பரீட்சிக்கப்படுவர். பயிற்சின்போது உரிய தேவைப்பாடுகளை திருப்திகரமாகப் பூர்த்தி செய்பவர்கள் சுங்கத் திணைக்களத்தின்

நிரந்தரப் பதவியொன்றிற்கு உள்வாங்கப்படுவார்கள். பயிற்சியினை பூர்த்திசெய்ய தவறுபவர்கள் சேவையிலிருந்து நீக்கப்படுவர்.

(i) வேதனம்.- இப்பதவிக்கான திரட்டிய மாதாந்த வேதன அளவுத்திட்டம் வருமாறு ரூபா 12,210-130 x 10-145 x 10-160 x 10-170 x 12 = 18,600
(பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 6/2006 (iv) - பி.எல் 2 - 2006 - எ)

(ii) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்குரியது என்பதுடன் விதவைகள் /அனாதைகள் ஓய்வூதியத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

(iii) சித்திபெற்று தெரிவாகும் பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுக் காலப்பகுதிக்கு தகுதிகூர் நிலையில் வைக்கப்பட்டு நியமனம் வழங்கப்படும்.

(iv) நியமனத்தர்கள் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றக் கூடிய உடல் நிலை தகுதியினை உடையவர்கள் என்பதை பரீட்சிப்பதற்காக அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரினால் நடாத்தப்படும் மருத்துவப் பரீட்சைக்கு உட்படுதல் வேண்டும்.

(v) நியமனத்தர்கள் இத்தீவின் எப்பாகத்திலும் இரவிலும் பகலிலும் சேவையாற்றுவதற்கு பிணிக்கப்பட்டுள்ளார்கள்.

(vi) அரசாங்க வர்த்தமானி அறிவித்தலில் பகுதி I இன் (IIஅ) ஆம் பிரிவின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனை களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

4. **பரீட்சைத் திட்டம்**.- ஆட்சேர்ப்புக்கான பரீட்சையானது பின்வரும் இரண்டு) வினாப்பத்திரங்களை கொண்டிருக்கும் :

| | | புள்ளிகள் |
|---|---|---|
| (01) | உளச்சார்புப் பரீட்சை (1 மணித்தியாலம்) | 100 |
| (02) | கணிதம் (1 1/2 மணித்தியாலங்கள் ) | 100 |
| | மொத்தம் | 200 |

(01) உளச்சார்புப் பரீட்சை வினாத்தாள்.- இவ்வினாத் தாளானது மொழித் தேர்ச்சி, தர்க்க ரீதியான அறிவு என்பவற்றை பரிசோதிப்பதற்கான கேள்விகளை கொண்டிருக்கும்.

(02) கணித வினாத்தாள்.- இவ்வினாத்தாளானது கணித அறிவினை பரிசோதிப்பதற்கான கேள்விகளை கொண்டிருக்கும்.

**குறிப்பு**.- இப்பரீட்சையானது சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். இந்த அறிவித்தலின் பந்தி 02 (iii) இல் குறிப்பிடப்பட்ட தகைமை பரீட்சையில் சித்திபெற்ற மொழியிலேயே விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற வேண்டும் (அதாவது - சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்) ஆயினும் தகைமை பரீட்சையை ஆங்கிலம் அல்லது தமிழ் மொழியில் சித்திபெறும் ஒரு விண்ணப்பதாரி அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழியில் கல்விகற்ற ஒரு விண்ணப்பதாரி தாம் விரும்பினால் இப்பரிட்சைக்கு சிங்கள மொழியில் தோற்றலாம். பரீட்சார்த்தி விண்ணப்பத்திற் கொடுத்த பரீட்சை மொழியை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டார்.

(i) தெளிவற்ற எழுத்துக்கும் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். தெளிவற்ற எழுத்தில் விடையெழுதும் விண்ணப்பதாரி தகைமை நீக்கம் செய்யப்படக் கூடும்.

(ii) தகைமையுடைய விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகளானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பிவைக்கப்படும். ஆனால் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது பரீட்சைக்குத் தோற்றுவதற்கான எல்லாத் தகைமைகளையும் பெற்றுள்ளார் என கருதுதல் ஆகாது. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். அச்சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாகுதல் வேண்டும்.

(iii) மதிப்பிடுகை.- ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 50% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் தற்போதுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு இணங்க மொத்தத்தின் இறங்குவரிசையில் முதற்கட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். முதற்கட்ட நேர்முகப் பரீட்சையில் விளையாட்டு திறமைகளுக்காக ஆகக்கூடியது 10 புள்ளிகள் வழங்கப்படும். அதன் பின்னர் பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும். இதன்போது எவ்வித புள்ளிகளும் வழங்கப்பட மாட்டாது, மற்றும் இப்பதவிக்குத் தேவையான தேவைப்பாடுகளை பூர்த்திசெய்திருத்தல் மாத்திரம் பரிசோதிக்கப்படும்.

முதற்கட்ட நேர்முகப்பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் நடைமுறை :

***வலய மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள்***.- முதலாமிடத்திற்கு 3 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 2 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 1 புள்ளி.

***மாவட்ட மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள்***.- முதலாமிடத்திற்கு 4 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 3 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 2 புள்ளி.

***தேசிய மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள்***.- முதலாமிடத்திற்கு 5 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 4 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 3 புள்ளி.

5. **தெரிவுமுறை அடிப்படை அல்லது தேரந்தெடுக்கும் முறை**.- எழுத்துப் பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களுக்கு பணி பயில்பவராக நியமனம் அளிப்பதற்கு தெரிவுசெய்யப்படுவர். அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 10% பெண் பரீட்சார்த்திகளுக்கு ஒதுக்கி வைக்கப்படும்.

**குறிப்பு**.- சுங்கத் திணைக்களத்தினது வேலைகளுக்கேற்ப பெண் அலுவலகர்களும்கூட இரவு வேளையில் கடமைபுரிய வேண்டியிருக்கும்.

6. ஆண்/பெண் விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் பரீட்சைக்குரிய விண்ணப்ப திகதி முடிவுறுவதற்கு முன்னர் சகல தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்திருக்க வேண்டுமென்பது கட்டாயமானதாகும்.

7. **விண்ணப்பிக்கும் முறை**.- (i) இந்த அறிவித்தலின் இறுதியில் மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தாம் பரீட்சை எழுதுவதற்கு உத்தேசித்துள்ள மொழி மூலத்தில் தாமாகவே விண்ணப்பங்களை இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயாரித்து சொந்த கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பத்தினது ஒவ்வொரு கூட்டிலும் அறிவுறுத்தலுக்கிணங்க விண்ணப்பதாரர்களால் நிரப்பப்பட வேண்டியதுடன் ஏதாவது கூட்டினுள் பொருத்தமற்றவை இருப்பின்,

அத்தகைய கூட்டினுள் "பொருத்தமற்றவை" என்ற பதம் எழுதப்படல் வேண்டும். கண்டிப்பாக கவனிக்கப்பட வேண்டியது யாதெனில், விண்ணபத்தில் கூடுகள் நிரப்பப்படாது விடுதலானது விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படுவதற்கான காரணமாக இருக்கும். (விண்ணப்பங் களானது A4 அளவிலான தாளில் தயாரித்தல் வேண்டும். மாதிரி விண்ணபத்தில் 01 தொடக்கம் 06வரையான தலைப்பு இலக்கங்கள் முதல் பக்கத்திலும் 07 தொடக்கம் 12 வரையிலானவை இரண்டாவது பக்கத்திலும் மிதியானவை மூன்றாவது பக்கத்திலும் வரும் விதம் தயாரித்தல் வேண்டும்). சிங்கள மற்றும் தமிழ் மொழி மூல மாதிரி விண்ணபங்களில் பரீட்சையின் தலைப்பானது ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) விண்ணபங்களானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு 2011, சனவரி 07 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின் பெறப்படும் எந்தவொரு விண்ணப்பப்படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

(iii) பரீட்சைக் கட்டணமாக ரூபா 400 இனை ஏதாவது மாவட்ட/ பிரதேச செயலக அலுவலகத்தில், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003.02.13 ஆம் இலக்க வருமான தலைப்பின் கீழ் வரவு வைப்பதற்காக செலுத்தப்படலாம் பற்றுச்சீட்டானது விண்ணபத்துடன் இணைக்கப்படவேண்டியதுடன் விண்ணபதாரர்கள் பற்றுச்சீட்டின் படப்பிரதியொன்றினை தம்மிடம் வைத்துக்கொள்ள ஆலோசனை வழங்கப்படுகின்றது. இக்கட்டணமானது எச்சந்தர்ப்பத்திலும் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

(iv) அரசாங்க திணைக்களங்களில் அல்லது சபைகளில் அல்லது கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் விண்ணபதாரிகள், தற்போது தாங்கள் சேவையாற்றும் திணைக்களங்கள் அல்லது நிறுவனங்களின் தலைவர்களினூடாக தங்களது விண்ணபங்களை அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணபதாரிகள் தங்கள் விண்ணபங்களை 2011.01.07 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினை சென்றடைய வேண்டுமென்ற வேண்டு கோளுடன் தங்கள் விண்ணபங்களை தங்கள் திணைக்கள அல்லது நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணபங்கள் தனிப்பட்ட முறையில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கோ அல்லது திணைக்களத்தைச் சேர்ந்த வேறு எவரேனும் உத்தியோகத்தருக்கோ அனுப்பப்படலாகாது. இத்திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணபங்கள், அவை அத்திணைக்களங்களுக்கூடாக அனுப்பப்பட்டாலும்கூட அவைகள் நிராகரிக்கப்படும்.

அரசாங்க சேவையிலுள்ள விண்ணபதாரர்களது விண்ணபத்தில் திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவர் விண்ணபதாரரது கையொப்பத்தினை உறுதிப்படுத்தி அவரது கையொப்பம், அலுவலக முத்திரை என்பன இடப்படாதவிடத்து அத்தகைய விண்ணபங்கள் நிராகரிக்கப்படும்.

(v) *உறுதிப்படுத்துதல்.*- அரசாங்க சேவையிலுள்ள ஒரு விண்ணபதாரியின் கையொப்பமானது அவரது திணைக்களத் தலைவரினால் அல்லது அவரது சார்பில் அதிகாரப்படுத்தப்பட்ட அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

ஏனைய விண்ணபதாரரின் கையொப்பங்கள் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதாவது சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்த நொத்தாரிசு, அரசாங்க பாடசாலை அதிபர் அல்லது பணிப்பாளர் நிர்வகிக்கப்படும் பாடசாலை, கடற்படை, வான்படை அல்லது தரைப்படை அதிகாரமுடைய அதிகாரி, ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேல் வருடாந்த சம்பளமுள்ள நிரந்தர அரசாங்க அலுவலர், பௌத்த ஆலயமொன்றின் பிரதம குரு அல்லது உயர்மத குரு அல்லது ஏதாவது வழிபாட்டுத் தலமொன்றுக்கு பொறுப்பாகவுள்ள அல்லது முக்கிய பதவி வகிப்பவர்.

8. **பரீட்சைக்கு அனுமதியளித்தல்.**- விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட சகல விண்ணபதாரிகளுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்புவார். பரீட்சைகளுக்கென தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்தப்பட்ட தமது அனுமதி அட்டைகளை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

பரீட்சார்த்தி அவருக்கென ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். தமக்கென ஒதுக்கப்படாத பரீட்சை மண்டபத்துக்கு செல்லும் பரீட்சார்த்திகளுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும், பரீட்சை ஆரம்பமாகும் நாளன்று பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையினை கையளித்தல் வேண்டும்.

பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் ஒழுங்குவிதிகளும் இவ்வர்த்த மானியின் பகுதி I : தொகுதி (II அ) இல் வேறாக தரப்பட்டுள்ளன. இந்த விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர்.

பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களம் பத்திரிகை அறிவிப்பொன்றினை வெளியிடும். அவ் அறிவித்தல் வெளியாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு என்பவற்றில் உறுதிப்படுத்திய நிழற்பட பிரதிகள், பதிவுசெய்த பற்றுச்சீட்டு, கொழும்பின் வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டை அனுப்புவதற்காக பெக்ஸ் இலக்கம், குறிப்பிட்ட உங்களது கோரிக்கை கடிதம் என்பவற்றை தம்வசம் வைத்துக்கொண்டு பரீட்சைகள் திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

9. **அடையாள அட்டைகள்.**- பரீட்சார்த்திகள் அவர்களது அடை யாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப் பட்ட அடையாள அட்டை ;
(ஆ) பரீட்சைத் திகதிக்கு முன்பதாக ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாது வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்கூறப்பட்டவாறான ஆவணமொன்றினை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியின் பரீட்சார்த்தத் தன்மை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பெயரில் நிராகரிக்கப்படலாம்.

10. **தகைமை ஆவணங்கள்.**- (i) விண்ணபத்துடன், பரீட்சைக் கட்டணமாக செலுத்தப்பட்ட காசுக்கட்டளை தவிர்ந்த பிற ஆவணங்கள் எதுவும் விண்ணபத்துடன் அனுப்பப்படலாகாது. ஆனால் விதித் துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் தேவையான விபரங்கள் விண்ணபத்தில் தரப்பட்டிருத்தல் வேண்டும். இந்த முறையில் சகல அம்சங்களிலும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பமானது அதன் தகுதிகளின் பெயரில் தீர்மானிக்கப்பட்டு நிராகரிக்கப்படலாம்.

(ii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் தகுதிபெற்ற பரீட்சார்த்திகள் தமது தகைமைகளை நிரூபிப்பதற்கான ஆவணச்சான்றிதழ்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் தேவைப்படும்.

(அ) பொறுப்புள்ள ஆளொருவரினால் ஒப்பமிடப்பட்ட குணநலச் சான்றிதழ்.

**குறிப்பு.-** இத்தகைய குணநலச் சான்றிதழானது சமாதான நீதவான், வழங்கறிஞர், வதிவிட பிரதேச செயலாளர் அல்லது ஆண்டொன்றிற்கு ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை திரட்டிய சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் அல்லது பொதுவாக நன்கு தெரிந்தவர்கள் இலகுவாக சிபாரிசு பெற்றுக் கொள்ளக்கூடியதுமான ஒருவரால் பெறப்படலாம். இத்தகைய உறுதிப்படுத்துபவரது பெயர், பதவி, முகவரி என்பன சான்றுப் படுத்தலில் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் பரீட்சார்த்திகளின் விடயத்தில் அவர்கள் குணநலச் சான்றிதழ்களை சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட மாட்டார்கள்.

(iii) (ஆ) பரீட்சார்த்திகள் பிறப்புப் பதிவினது சான்றுப்படுத்தப்பட்ட ஒரு பிரதி அல்லது பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வயது பற்றிய ஒரு விசேட சான்றிதழ் (பிறப்பு பதிவுசெய்யப்படாத பரீட்சார்த்திகளது விடயத்தில்)

**குறிப்பு.-** (i) பாடசாலை அல்லது கல்வித் தேவைகளுக்கென வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவிலிருந்து எடுக்கப்பட்ட சான்றுப்படுத்தப்பட்டதொரு பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ii) பிறப்புச் சான்றிதழ்களுக்குப் பதிலாக நம்பிக்கை உறுதிப் பத்திரங்களோ அல்லது ஞானஸ்நான சான்றிதழ்களோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

பரீட்சார்த்தி சாதாரணமாக பயன்படுத்தும் பெயர் அல்லது பெயர்களிலிருந்து பிறப்புச் சான்றிதழில் உள்ள பெயர் அல்லது பெயர்கள் வேறுபடின் அல்லது பரீட்சைக்கு விண்ணப்பதாரி தோற்றும் பெயர் வேறுபடின் பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தின் (அத்தியாயம் 110) 27 ஆம், 28 ஆம் பிரிவுகளின் நியதிகளுக்கு அமைய பிறப்புப் பதிவிலுள்ள பெயரை திருத்துவதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படல் வேண்டும்.

(iii) இலங்கைப் பிரசை என்ற பதிவுச்சான்றிதழ் அல்லது வம்சாவளிப் பிரசாவுரிமைக்கான கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட மூல உத்தியோகபூர்வ கடிதம் (ஏற்புடையதாயின்)

(iv) கல்வித் தகைமை மூலச்சான்றிதழ்கள் அல்லது அத்தகைய சான்றிதழ்கள் வழங்கப்படாதவிடத்து ஏனைய உத்தியோகபூர்வ ஆவணங்கள்

(v) வலய/மாவட்ட/தேசிய விளையாட்டு போட்டிகளில் பெற்றுக் கொண்ட நிரூபண ஆவணம்

(vi) விண்ணப்பத்தினை அனுப்புகின்ற சமயத்தில் சகல தேவையான ஆவணங்களையும் தயாராக வைத்திருக்கும்படி பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றனர். தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற அல்லது தேவையான சந்தர்ப்பத்தில் அவற்றைச் சமர்ப்பிப்பதில் தாமதங்களை ஏற்படுத்துகின்ற பரீட்சார்த்திகள் இப்பதவிக்கான நியமனத்திற்கு தகுதியற்றவர்களாவர்.

11. **தவறான தகவல்களை சமர்ப்பிப்பதற்கான தண்டனை.-** இப்பரீட்சைக்கான ஒழுங்குவிதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் அதற்குத் தோற்றுவதற்கு தகைமை அற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்படலாம்.

பரீட்சைக்கு விண்ணப்பதாரி ஒருவரினால் தரப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏதேனும் அவரது அறிவுக்கு எட்டியவரையில் தவறானவை என அல்லது வேண்டுமென்றே விபரங்களைத் தரவில்லையென காணப்படின் அல்லது அவரது சேவைக் காலத்தின் எக்காலப்பகுதியிலேனும் அவர் பரீட்சைக்குத் தோற்றும் தகைமையற்றவர் என நிரூபிக்கப்படின் அவர் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவார். இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணக்கமாக இல்லாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. இந்த ஒழுங்குவிதிகளில் கவனிக்கப்படாத ஏதேனும் விடயம் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி கையாளப்படும்.

விண்ணப்பமானது பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
பரீட்சைகள் திணைக்களம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

சுங்கப் பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சுங்கத் திணைக்களம்,
பிறிஸ்டல் வீதி,
கொழும்பு 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை சுங்கத் திணைக்களத்தின்
சுங்க காவலர் தரம் III ஆம் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான
திறந்த போட்டிப் பரீட்சை - 2010**

**OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO POSTS OF CUSTOMS GUARD, GRADE III OF SRI LANKA CUSTOMS DEPARTMENT - 2010**

(அலுவலக பாவனைக்கு மாத்திரம்)

நீர் இப்பரீட்சையில் தோற்றுவதற்கான மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

1. விண்ணப்பதாரரின் பெயர் :----.
   1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்கள்) (உதாரணம் :- SILVA, B.A) :----.
   1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழ்/ஆங்கிலம்) :----.
   1.3 முதலெழுத்துக்களால் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   சிங்களம்/தமிழில் :----.

2. நிரந்தர வதிவிட முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
----.
அனுமதி அட்டை அனுப்புவதற்கான விலாசம் :----.

3. தேசிய அடையாள அட்டையினது விபரங்கள் :----.

3.1 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3.2 வழங்கப்பட்ட திகதி :----. ☐

4. பால் :
ஆண் -0
பெண் -1 ☐
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

5. நீங்கள் இலங்கைப் பிரஜையா இல்லையா என்பதைக் குறிப்பிடவும் :----.

வம்சாவழி மூலம்-1
பதிவு மூலம்-2 ☐
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

6. இனம் :
சிங்களம்-1, இலங்கைத் தமிழ்-2, இந்தியத் தமிழ்-3, முஸ்லிம்-4, பறங்கியர்-5, ஏனையோர்-6 ☐
(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

7. (அ) பிறந்த திகதி :

வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

8. உடற்தகைமை தேவைப்பாடுகள் :

(i) உயரம் : .......... அடி .......... அங்குலங்கள்
(ii) மார்புச் சுற்றளவு (விரிவடைந்த நிலையில்) : ............ அங்குலங்கள்
(ஆண் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

9. கல்வித் தகைமைகள் :

(i) ஒரே தடவையில் பெறப்பட்ட கல்விப் பொதுத்தராதர சாதாரண தர) சான்றிதழ் பெறுபேறு :
பரீட்சையினது வருடம் :----.
சுட்டெண் :----.

| பாட இல | பாடம் | பெறுபேறு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

10. நீர் ஏதாவது குற்றச்செயலுக்காக எப்பொழுதாவது நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா ? (ஆம்/இல்லை) :- ☐

ஆம் எனில், விபரங்களைக் குறிப்பிடவும் :----.

11. பரீட்சைக் கட்டணம் (பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்) :

| |
|---|
| மாவட்ட/பிரதேச செயலாளர் அலுவலகம் : |
| பற்றுச்சீட்டு இலக்கம் :<br>திகதி : |

(இந்த விபரங்கள் கட்டாயமாக கொடுக்கப்படல் வேண்டும்.)

12. விண்ணப்பதாரியின் உறுதியுரை/ சான்றுப்படுத்தல்.- இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகிறேன். இவற்றில் அடங்கியுள்ள விபரங்களில் ஏதேனும் பொய்யானவை அல்லது தவறானவை எனக் காணப்படின் தெரிவுக்கு முன்னராயின் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும் அல்லது தெரிவின் பின்னராயின் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் கடப்பாடுடையவனாவேன். மேலும் பரீட்சை நடத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினது சட்டவிதிகளுக்கமைய நான் நடந்துகொள்ளுவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

13. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் (பொருத்தமற்றதை வெட்டிவிடவும்.) :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .............................. என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும். இத்திணைக்களத்தில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றுபவராக இருக்கின்றார் என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் 2010, .................. ஆந் திகதி இடப்பட்டது என நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

சுங்க காவலர் தரம் III ஆம் நியமனத்துக்காக அவன்/ அவள் தெரிவுசெய்யப்படின் இத்திணைக்களத்திலிருந்து/ சபை/ கூட்டுத்தாபனத்திலிருந்து அவரை விடுவிக்க முடியும்.

----,
உறுதிப்படுத்துபவரது கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரது முழுப்பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.
குறிப்பு.- வர்த்தமான பத்திரிகையின் 7 (V) ஆம் பந்தியில் குறிப்பிட்டதொரு நபரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

12-504

## இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் வகுப்பு II பிரிவு "ஆ" மற்றும் வகுப்பு II பிரிவு "அ" வில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2010/2011

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்பிற்கு ஏற்ப மேற்படி பரீட்சைகள், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2011, மாச்சு மாதம் கொழும்பில் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) இப்பரீட்சைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுமென்பதுடன் இப்பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பில் அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

(ii) இச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாகுதல் வேண்டும். பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள விதிகள், வர்த்தமானி அறிவித்தலின் தொடக்கத்தில் வேறாக அச்சிடப்பட்டுள்ளன.

3. இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அம்மாதிரிப் படிவத்திற்கு அமைய பரீட்சார்த்திகள் தத்தம் விண்ணப்பங்களை தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அதன்படி அரசாங்க சேவை அலுவலர்களாயின் தமது திணைக்கள தலைவர்கள் ஊடாகவும் மாகாண அரச சேவையின் அலுவலர்களாயின் அவர்கள் சேவையாற்றும் மாகாண சபையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாகவும் 2011, சனவரி 14 ஆந் திகதிக்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்புக்கள், வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு தமது விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு விண்ணப்பங்களை முன்வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

4. **அடையாள அட்டைகள்.**- பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்திப்படும் வண்ணம் தமது அடையாளத்தை பரீட்சார்த்திகளினால் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்றை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்படி ஆவணங்களில் ஒன்றையாவது முன்வைக்க இயலாத விண்ணப்பதாரர்களின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச்செய்யப்படலாம்.

5. **விண்ணப்பப்படிவம்.**- (i) ஏ4 அளவிலான ஒரு தாளில் விண்ணப்பத்தை தயாரித்தல் வேண்டும். இல. 1 முதல் 3 வரையிலான பந்திகளை முதலாம் பக்கத்திலும் ஏனையவற்றை மறுபக்கத்திலும் உள்ளடக்குதல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சில் பொறிக்கப்படினும் கூட, அதை சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரரின் கையெழுத்தினாலேயே நிரப்பப்படுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பத்தை நிரப்புதல் வேண்டும்.

(ii) விண்ணப்பத்தைத் தயாரித்துக்கொள்ளும்போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை, சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிட வேண்டும். மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு அமையுறாத விண்ணப்பங்களும், முழுமையாக தகவல்கள் குறிப்பிடாத விண்ணப்பங்களும் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பரீட்சார்த்தியினால் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துடன் அமையுறுகின்றதா என்பதை பரீட்சார்த்தி சோதித்துப் பார்க்கவேண்டியதுடன், அவ்விண்ணப்பப்பத்திரத்தின் புகைப்படப் பிரதியொன்றை தன்னிடம் வைத்துக்கொள்வது பிரயோசனப்படலாம்.

(iii) முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் அதற்கு அடுத்த தடவைகளில் அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் ரூபா 90 உம், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் ரூபா 50 உம் பரீட்சைக் கட்டணமாக செலுத்த வேண்டும். பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-20-13 இற்கு வரவுவைக்கும்படி இத்தீவின் ஏதாவதொரு அஞ்சல் அலுவலகத்திற்கு செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். இப்பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை பரீட்சார்த்தி தன்னிடம் வைத்துக்கொள்வது பிரயோசனப்படலாம். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீள செலுத்தப்பட மாட்டாது. இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணத்தை வேறு எந்தவொரு பரீட்சைக்கும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(iv) பரீட்சார்த்திகளுக்கு தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சைக்காக பரீட்சார்த்திகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் விண்ணப்பித்தால் அம் மும்மொழிகளிலும் பரீட்சை நடாத்தப்படுவதுடன் பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற எல்லா வினாத் தாள்களுக்கும் ஒரே மொழியில் பதிலெழுதுதல் வேண்டும்.

(v) ஓர் அலுவலர் வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே தடவையில் தோற்ற முடியாது.

(vi) எனினும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் ஐந்து வருட சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்து முதலாம் வினைத்திறன்காண் தடையில் சித்தியெய்திய வகுப்பு II பிரிவு "ஆ" வின் அலுவலர்கள் வகுப்பு II பிரிவு "அ" வின் வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்குத் தோற்றலாம். அவ்வாறான விண்ணப்பதாரர்கள் இரண்டு பரீட்சைக்கும் இரண்டு விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

6. விண்ணப்பங்கள் அனுப்பியுள்ள சகல அலுவலர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேரசூசிப் பிரதியுடன் அனுமதி அட்டையும் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் தமது கையொப்பம் உறுதிப்படுத்திய அனுமதி அட்டைகளை பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறானதொரு அனுமதி அட்டை இல்லாது பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்பட மாட்டாது. பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டதும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் அதுபற்றிய பத்திரிகை அறிவித்தல் ஒன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடையாவிடின் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். தாங்கள் வைத்திருந்த விண்ணப்பம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின்

சான்றுப்படுத்திய புகைப்படப் பிரதியொன்றையும், பதிவுசெய்த பற்றுச்சீட்டும், கொழும்பிற்கு வெளிப்பிரதேசமாக இருப்பின் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக பெக்ஸ் இலக்கமொன்றையும் குறிப்பிட்ட தங்களின் வேண்டுகோள் கடிதத்தையும் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகவும் பிரயோசனமாக இருக்கும்.

7. மேற்படி (06) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடு களைப் பூர்த்திசெய்யத் தவறும் பரீட்சார்த்திகளினால் பின்னராக அனுப்பப்படும் ஆவணங்கள் கவனிக்கப்பட மாட்டாது.

8. அலுவலர்கள் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறாகவும் ஒவ்வொன்றுக்கு வேறுபட்ட தடவைகளிலும் தோற்றலாம். எனினும் சித்திபெறுவதற்காக ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளையாவது பெறுதல் வேண்டும்.

9. **பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுதல்.**- இலக்கம் 03 இன்கீழ் மாகாண அரச சேவை அலுவலர்களின் பெறுபேறுகள் உரிய மாகாண அரசசேவை ஆணைக்குழுவின் செயலாளரிடமும், அரசாங்க சேவை அலுவலர்களின் பெறுபேறுகள் உரிய அமைச்சு செயலாளரிடமும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **பரீட்சைத் திட்டம்.**- (1) வகுப்பு II பிரிவு "ஆ" ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பின்வரும் 2 வினாத்தாள்களைக் கொண்டமைந்திருக்கும் :

(1) அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (காலம் : 2 மணித்தியாலம்) (பாட இல. 01) – 100 புள்ளிகள்
(2) நிதி ஒழுங்குவிதிகள் (காலம் : 2 மணித்தியாலம்) (பாட இல. 02) – 100 புள்ளிகள்

முதலாம் வினாத்தாளுக்கான பாடவிதானம் :
*அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (பாட இல.01)-*

இவ்வினாத்தாள் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களைக் கொண்டமைந்திருக்கும் :

| | |
|---|---|
| அத்தியாயம் II | சேவைக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் நியமனம் |
| அத்தியாயம் III | இடமாற்றங்கள் |
| அத்தியாயம் IV | மாதச் சம்பளம், தற்காலிக நிலை, நிரந்தரம் மற்றும் ஓய்வூதியங்களுக்கான உரித்துடைமை |
| அத்தியாயம் V | விடுவிப்பு, மீள சேவைக்கு அமர்த்துகை, சேவை முடிவுறுத்தல் |
| அத்தியாயம் VIII | மேலதிக நேரப்படிகள், விடுமுறை நாட்களும், விடுமுறை நாட்களுக்கான சம்பளங்களும் படிகளும் |
| அத்தியாயம் XII | விடுமுறை |
| அத்தியாயம் XIII | புகையிரத ஆணைச்சீட்டுக்கள் |
| அத்தியாயம் XIV | தீவுக்குள் கடமை நிமித்தமான பிரயாணங்கள் |
| அத்தியாயம் XIX | அரசாங்க வாசஸ்தலங்கள் |
| அத்தியாயம் XLVII | பொது நடத்தையும் ஒழுக்கமும் |

இரண்டாவது வினாத்தாளுக்கான பாடவிதானம் :
*நிதி ஒழுங்குவிதிகள் (பாட இல. 02)*

இவ்வினாத்தாள் நிதி ஒழுங்குவிதிகளின் பின்வரும் அத்தியாயங்களைக் கொண்டமைந்திருக்கும் :

(1) அத்தியாயம் I.- செலவின, வருமான மதிப்பீடுகள் திரட்டிய நிதி, வருடாந்த மதிப்பீடுகள், வருடாந்த மதிப்பீடுகளின் மாற்றங்கள் (நி. ஒ. 1-68 வரை)

(2) அத்தியாயம் III.- நிதி முகாமையும் பொறுப்புக்களும், பிரதான கணக்கீட்டு அலுவலர்கள், கணக்கீட்டு அலுவலர்கள், அரசிறை கணக்கு அலுவலர்கள் கொடுப்பனவுக்காக அதிகாரமளித்தல், அங்கீகாரம் வழங்குதல், உறுதிப்படுத்தல் அதிகாரங்களைக் கையளித்தல் (நி. ஒ. 124-147 வரை)

(2) வகுப்பு II பிரிவு "அ" வைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பின்வரும் 2 வினாத்தாள்களைக் கொண்டமைந்திருக்கும் :

(அ) அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (காலம் : 2 மணித்தியாலம்) (பாட இல. 03) – 100 புள்ளிகள்
(ஆ) நிதி ஒழுங்குவிதிகள் (காலம் : 2 மணித்தியாலயம்) (பாட இல. 04) – 100 புள்ளிகள்

முதலாம் வினாத்தாளுக்கான பாடவிதானம்.-
*அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (பாட இல. 03)*

இவ்வினாத்தாள் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களைக் கொண்டமைந்திருக்கும் :

| | |
|---|---|
| அத்தியாயம் XV | கற்கை நெறி, பயிற்சி அல்லது கடமையிலான வெளிநாட்டுப் பயணம் |
| அத்தியாயம் XVI | விடுமுறை பிரயாணங்கள் |
| அத்தியாயம் XXIII | குறிப்பிட்ட வகை நோய்களால் பீடிக்கப்பட்டிருக்கும் அரசாங்க அலுவலர்கள் சம்பந்தமான விசேட சலுகைகளும் அதுபற்றிய நிபந்தனைகளும் |
| அத்தியாயம் XXIV | சம்பளக் கடன்களும் முற்பணங்களும் |
| அத்தியாயம் XXV | தொழிற்சங்க உறுப்பினர்களுக்கான சலுகைகள் |
| அத்தியாயம் XXVII | கடிதத் தொடர்பு வழிமுறைகள் |
| அத்தியாயம் XXVIII | நிர்வாக நடைமுறைகளும் நியதிகளும் |
| அத்தியாயம் XXX | அரச அலுவலர்கள் மீதான அரசாங்கத்தின் அதிகாரங்கள் |
| அத்தியாயம் XXXIII | சட்ட ஆலோசனையும் சட்ட நடவடிக்கைகளும் |
| அத்தியாயம் XLVII | பொதுவான நடத்தைகளும் ஒழுக்கமும் |
| அத்தியாயம் XLVIII | ஒழுக்காற்று நடவடிக்கைமுறை விதிகள் |

அலுவலர்களின் செயலாற்றுகை, மதிப்பீடுகள் பற்றிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் ஏற்புடையதாகும்.

*இரண்டாவது வினாத்தாளுக்கான பாடவிதானம்.-*
*நிதி ஒழுங்குவிதி : பாட இலக்கம் 04*

இவ்வினாத்தாள் நிதி ஒழுங்குவிதிகளின் பின்வரும் அத்தியாயங்களைக் கொண்டமைந்திருக்கும் :

(1) அத்தியாயம் IV.- அரசாங்க நிதி முதலியவற்றிற்கான பொறுப்பு, கட்டுநிதியும் வங்கிக் கணக்குகளும், அரசாங்க நிதிப் பாதுகாப்பு, மீளாய்வு சபைகள், மேல திகப்பற்று, வங்கிக் கணக்குகள் (நி. ஒ. 315-396 வரை)

(2) அத்தியாயம் XIII.- வழங்கல்கள், வேலைகள், சேவைகள் : வழங்கல்கள்-கொள்வனவுச் செயற்பாடு, பண்ட சாலை மீளாய்வுகள், பண்டசாலைப்படுத்தல் ஒப்பந் தங்கள் கேள்வி நடைமுறை (நி. ஒ. 708-755 வரை)

11. இவ்வறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயம் பற்றியும் அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

12. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டையொன்றை வழங்குதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளை பூர்த்திசெய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளுதலாகாது.

13. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கில வாசகங்களுக்கு இடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்பட்டால் சிங்கள மொழி வாசகம் முன்னோங்கி நிற்கும்.

பீ. பீ. அபேகோன்,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2010.12.02.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் வகுப்பு II பிரிவு 'ஆ' மற்றும் வகுப்பு II பிரிவு 'அ' வில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2010/2011**

**(Efficiency Bar Examination Prescribed for Officers in Segment "B" and Segment "A" of Class II of the Sri Lanka Technical Service - 2010/2011)**

(பிரிவு 'ஆ' மற்றும் 'அ' இற்காக ஒரே முறையில் விண்ணப்பிக்க முடியாது)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : [ ]
(சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4)
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

விண்ணப்பிக்கும் பரீட்சை :
II "ஆ" - 0
II "அ" - 1 [ ]
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :———.
(முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்)
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உதா. : (SILVA, A.B)

(ஆ) முழுப்பெயர் :———.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர் :———.
(சிங்களத்தில்/தமிழில்)

(ஈ) அலுவலக முகவரி :———.
(ஆங்கிலத்தில்/தமிழில்)
(பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இம்முகவரிக்கு அனுப்பப்படும்.)

(உ) பால் (ஆண்/பெண்) : (ஆண்-0, பெண்-1) [ ]
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

(ஊ) தோற்றும் பாடம், பாடங்கள் :
(வகுப்பு II "ஆ" பிரிவின் வகுப்பு II "அ" பிரிவின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்காக தோற்றும் பாடங்கள் (ஏற்புடையதாகாத சொற்களைக் கீறிவிடவும்)

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| ——— | [ ] |
| ——— | [ ] |

2. (i) தேசிய அடையாள அட்டை இலக்கம் :
[ | | | | | | | | | ]

(ii) நீங்கள் மாகாண அரச சேவையைச் சார்ந்தவரா ? அல்லது அரச சேவையைச் சார்ந்தவரா ? [ ]
(பொருத்தமான இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

(அரசாங்க சேவை – 1, மேல் மாகாணம் - 2, தென் மாகாணம் - 3, மத்திய மாகாணம் - 4, வடமேல் மாகாணம் - 5, சப்பிரகமுவ மாகாணம் - 6, ஊவா மாகாணம் - 7, வடமத்திய மாகாணம் - 8, வடக்கு மாகாணம் - 9, கிழக்கு மாகாணம் - 10)

3. (i) பிறந்த திகதி :
ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

(ii) 2010.12.31 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

4. (i) பதவிப் பெயர் :———.

(ii) இலங்கை தொழில்நுட்ப சேவையின் வகுப்பும் தரமும் ................ (II "அ"/"ஆ" என்ற வகையில் உள்ளடக்க வேண்டும்.) :———.

(iii) 2010.12.31 ஆந் திகதிக்கு அத் தரத்தின் சேவைக்காலம் : ———.

5. நீங்கள் எத்திணைக்களத்தைச் சேர்ந்தவர் :———.

| பற்றுச்சீட்டை இங்கு ஒட்டிவிடவும்.<br>(பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்வது பிரயோசனப்படலாம்) |
|---|

6. மேற்போந்த விபரங்கள் சரியானவை எனவும் மேற்காட்டப் பட்டுள்ள மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துடையேன் என்றும் வெளிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால்

விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிவேன் என்றும் வெளிப்படுத்துகிறேன்.

———,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :———.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக் களத்தில் அவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரம்பெற்றுள்ள அலுவலர் அல்லது தமது பிரதேச தலைவர் முன்னிலையில் விண்ணப்ப தாரர் தனது கையொப்பத்தை இடவேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தைச் சேர்ந்த அலுவலரும் நான் தனிப்பட்ட முறையில் அறிந்தவருமான திரு./திருமதி/செல்வி ......................... ............................................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதென்றும் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் சான்றுப்படுத்துகிறேன்.

———,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

மேற்போந்த இல. 1 முதல் 6 வரையான பந்திகளில் உள்ளடங்கியுள்ள தகவல்கள் சரியானவை என்றும் இப்பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர் என்றும் அவரால் தரப்பட்டுள்ள மொழியில் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியுடையவர் என்றும் சான்றுபடுத்துகிறேன்.

———,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவிப்பெயரும்.

திகதி :———.

12-572

---

**கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு**

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

**இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு**

**ஆய்வு உதவியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளல் - 2010**

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு ஆய்வு உதவியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்துகொள்வதன் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2010.11.26 ஆந் திகதிய 1682 ஆம் இலக்கத்தைக் கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் 9.1 ஆம் பந்தி பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றன.

2. விண்ணப்பிக்கும் முறை :

(i) விண்ணப்பங்கள் 2010.11.26 ஆந் திகதிய 1682 ஆம் இலக்கத்தினைக் கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய இருத்தல் வேண்டும். 8 1/2 x 12 (A4) அளவிலான கடதாசியின் இரு பக்கத்தையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2010, திசெம்பர் 21 ஆந் திகதிக்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், த. பெ. இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை" எனும் முகவரிக்கு கிடைக்கத்தக்கவாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஆய்வு உதவியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்துகொள்வதற்கான போட்டிப் பரீட்சை" எனும் வாசகம் தெளிவாக எழுதப்பட்டு இருத்தல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பேராசிரியர் ஏ. டி. என். சந்திரசிறி,
கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகம்.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
பேராதனை,
2010, நவெம்பர் 29.

12-598

---

**இலங்கைப் புகையிரத திணைக்களத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் உப புகையிரத நிலைய அதிபர்கள் பதவிக்கு ஆட்சேர்த்தல்**

இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படும் உப புகையிரத நிலைய அதிபர்கள் வெற்றிடங்களாக நிலவும் கீழ்க்குறிப்பிடப்படும் புகையிரத நிலையங்களுக்காக இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

1. பன்னிபிட்டிய
2. அநுராதபுரம் புதிய நகரம்
3. ஹொரிவில
4. துடெல்ல
5. ஹொரபே
6. எண்டேரமுல்ல
7. பத்துலுஓய
8. உடஹமுல்ல
9. மாலபல்ல
10. அவுகன
11. செவனபிட்டிய
12. குடஹகபொல
13. தில்லடிய
14. ஹீன்தெனிய-பட்டிகொட
15. லக்ஸ உயன
16. கல்லேல்ல
17. ரன்முக்கம
18. பெங்கிரிவத்த
19. தெல்வத்த
20. நாவின்ன

*1. **உப-புகையிரத நிலைய அதிபர்களின் கடமை பற்றிய விபரங்கள்**.- பிரவேசச் சீட்டு விற்பனை நிலையத்துக்குப் பொறுப்பாக ஈடுபடுத்தப்படும் முகவர்கள் அந்தந்த இடங்களில் நிறுத்தப்படும் புகையிரதங்களுக்கேற்ப, 24 மணித்தியாலமும் பிரவேசச் சீட்டுக்களை விற்பனை செய்தல், பொதிகள் (Parcel) பொறுப்பேற்றல் மற்றும் கிடைக்கும் பொதிகளை உரித்தாளர்களுக்கு ஒப்படைத்தல், தினமும் ஒன்றுசேரும் பணத்தை பிரதம புகையிரத கணக்காளருக்கு அனுப்புதல், அந்த இடத்தை சுத்தமாக வைத்திருத்தல் மற்றும் புகையிரத பொது முகாமையாளரினால் சில சந்தர்ப்பங்களுக்கமைய ஒப்படைக்கப்படும் வேறு கடமைகளும் இம்முகவர்களின் பொதுவான கடமைகளாகும்.*

*2. **கொடுப்பனவு**.- நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கைக்கு உரித்தற்ற பதவியொன்றாகும். தேர்ந்தெடுக்கப்படும் ஆட்களுக்கு அந்தந்த நிலைய வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட தரகுப்பணம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு (Allowance) மட்டும் செலுத்தப்படும். மேலும் ஆகக்குறைந்த தரகுத் தொகை ரூபா 310 ஆவதுடன், தரகுத் தொகையுடன் செலுத்தப்படும் கொடுப்பனவு ஆகக்கூடியது ரூபா 5,329 இற்கு குறையாது.*

*3. ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் விண்ணப்பிக்க முடிவதுடன், ஒரு விண்ணப்பதாரி தமது விண்ணப்பத்தில் விண்ணப்பிக்க இயல்வது ஒரு புகையிரத நிலையத்துக்கு மட்டுமேயாகும். ஒன்றுக்குக் கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், முதலாவதாக குறிப்பிட்டுள்ள உப புகையிரத நிலையம் விண்ணப்பித்துள்ள பிரகாரம் கவனத்திற் கொள்ளப்படும்.*

*4. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது 18 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.*

*5. **கல்வித் தகைமைகள்**.- க.பொ.த.(சா.த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ஆங்கிலம் மற்றும் கணிதம் உட்பட நான்கு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

*6. **வேறு தகைமைகள்**.- (i) விண்ணப்பதாரி குறிப்பிட்ட புகையிரத நிலையத்திலிருந்து 11 கிலோ மீற்றருக்குள் (நேரடி தூரம்) கிட்டிய காலப்பகுதிக்குள் 5 வருட கால நிரந்தரமாக வசித்தவராக இருத்தல் வேண்டும். இணைக்கப்படும் கடிதம் வழங்கப்பட முன்னர் இது தொடர்பாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்களினால் நிரூபித்தல் வேண்டும். (கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ், பிரதேச செயலாளரின் சான்றிதழ், வாக்காளர் இடாப்புப் பெயர் பட்டியலின் பிரதியொன்று போன்றவைகளினால்) விண்ணப்பத்தில் குறிப்பிடப் பட்டுள்ள முகவரி, நிரந்தர முகவரியாக இருக்க வேண்டியதுடன், புகையிரத நிலையத்துக்குள்ள நேரடி தூரம் கணக்கிடப்பட வேண்டியது அவ்விடத்திலிருந்தே ஆகும்.*

*(ii) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.*

*(iii) உப புகையிரத நிலைய அதிபரொருவராக தற்போது கடமை புரியும் அல்லது அவ்வாறு சேவையாற்றி சேவையை முடிவுறுத்தப்பட்ட ஆட்களுக்கு இதற்காக விண்ணப்பிக்க உரித்தில்லை.*

*(iv) தேர்ந்தெடுக்கப்படுபவர் நல்ல தேகாரோக்கிய நிலையிலுள்ள மற்றும் கண் பார்வை சிறந்த நிலையிலுள்ளதென உறுதிப்படுத்தப்பட்ட பிறகே ஆகும். தகைமைகள் மற்றும் சிறந்த கண் பார்வையுடையவராக இருத்தல் கட்டாயமாகும்.*

*7. **தேர்ந்தெடுக்கப்படும் முறை**.- புகையிரத பொது முகாமையாளரினால் நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சையின் திறனின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும். அதன் பிரகாரம் நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சையில் சகல விண்ணப்பதாரிகளும் கீழ்வரும் பாடங்களில் 2 வினாப்பத்திரங்களுக்கு விடையளித்தல் வேண்டும். பரீட்சையில் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு பாடத்தில் ஆகக்குறைந்தது 40% வீதமான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

(i) *மொழித்தேர்ச்சி.- (காலம் : 1 மணித்தியாலம்)-மொத்தப் புள்ளிகள் 100 ஆகும். கிரகித்தல் மற்றும் சரியான மொழியை கையாழுதல் பற்றிய விடய தொடர்புடைய வினாக்கள் அடங்கிய வினாப்பத்திரமொன்றாகும்.*

(ii) *உளச்சார்பு பரீட்சை.- (காலம் : 1 மணித்தியாலம்)-மொத்தப் புள்ளிகள் 100 ஆகும். வினாப்பத்திரத்திலேயே விடையளிக்க வேண்டிய கணித வினாக்கள், மொழிச் சீராக்கல் குறிப்புகள், படங்கள், வரைபடங்கள் ஊடாக தர்க்க ரீதியான உடனடி தீர்வுகளைக் காணும் திறனுடன் கூடிய உளச்சார்பை அளவிடும் பலதரப்பட்ட முறையிலான பல்லினத் தெரிவு முறையான வினாப்பத்திரமொன்றாகும்.*

**குறிப்பு :**

(i) *போட்டிப் பரீட்சையில் தகுதிபெற்றவர்களில் அந்தந்த பிரவேசச்சீட்டு விற்பனை நிலையத்துக்கமைவாக, ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரி குறிப்பிட்ட பிரவேசச் சீட்டு விற்பனை நிலையத்துக்காக நியமிப்பதற்கு கவனத்திற் கொள்வதற்காக தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு அழைக்கப்படுவர்.*

(ii) *நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.*

(iii) *தகைமைபெற்றவர்கள் சமமான புள்ளிகளைப் பெற்றிருப்பின் அதுபோன்ற சந்தர்ப்பங்களில் புகையிரத நிலைய விற்பனை முகவரின்கீழ் அல்லது உப புகையிரத நிலைய அதிபரின்கீழ் அங்கீகரிக்கப் பட்ட பதிலாள் ஒருவராக சேவையாற்றியுள்ள விண்ணப்பதாரிக்கு வாய்ப்பு வழங்கப்படும். அவ்வாறில்லாவிடில் குறிப்பிட்ட பிரவேசச்சீட்டு விற்பனை நிலையத்திலிருந்து மிகவும் கிட்டிய இடத்தில் வசிப்பவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.*

*8. **சேவையில் ஈடுபடுத்தப்படும் நிபந்தனைகள் :***

*(அ) தேர்ந்தெடுக்கப்படுபவரினால் புகையிரத பொது முகாமையாளரினால் தீர்மானப்படி அல்லது ஆகக்குறைந்தது ரூபா 25,000 தொகை பாதுகாப்பு பிணையொன்றாக புகையிரத பொது முகாமையாளரின் பெயருக்கு வைப்புச் செய்யப்பட வேண்டியதுடன், புகையிரத பொது முகாமையாளர் அவர்களுடன் கையொப்பமிடும் ஒப்பந்தத்தில் நிபந்தனைகளுக்கு அமைய செயற்பட வேண்டும். அந்நிபந்தனையை மீறல் சேவையை முடிவுறுத்துவதற்கு ஒரு காரணமாகும்.*

*(ஆ) இது ஒப்பந்த அடிப்படையிலான ஒன்றாவதுடன், வருடந் தோறும் குறிப்பிட்ட ஒப்பந்தம் புதுப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு புதுப்பிக்கப்படாத சந்தர்ப்பங்களில் ஒப்பந்தம் காலாவதியாகிவிடும்.*

(இ) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி தாம் சேவையை பொறுப்பேற்ற நிலையத்தில் கடமை பற்றிய 14 நாட்களுக்கான பயிற்சியொன்றினை பொது முகாமையாளரினால் குறிப்பிடும் புகையிரத நிலையமொன்றில் பெற்றுக்கொள்ள முடியும். இப்பயிற்சி பெறும் காலத்துக்காக எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

(ஈ) தமக்குப் பதிலாக உதவியாக வேலை செய்ய புகையிரத திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் தமக்கு உதவியாளர் ஒருவரை அங்கீகரித்துக்கொள்ள இயலுவதுடன், பதிலாள் சார்பாக எதுவித கொடுப்பனவும் திணைக்களத்தினால் செலுத்தப்பட மாட்டாது. நிலையத்தின் முழுப் பொறுப்பும் உப புகையிரத நிலைய அதிபரினதாகும்.

(உ) பயிற்சி பெறும் காலத்தில் அல்லது உப புகையிரத நிலைய அதிபராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அல்லது நேர்முகப் பரீட்சைக்கு அல்லது வேறு ஏதேனும் சந்தர்ப்பங்களில் அல்லது விண்ணப்பதாரரால்/அவருக்காக பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள/வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானவை அல்லது பொய்யானவை என வெளிப்படுத்தப்பட்டால் எதுவித முன்அறிவித்தலோ நஷ்டஈட்டுக் கொடுப்பனவோ இன்றி உடனடியாக செயற்படும் வண்ணம் எங்கள் சேவையைப் பெற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும்.

(ஊ) உப-புகையிரத நிலைய அதிபராக தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு அத்தெரிவின் அடிப்படையில் புகையிரத திணைக்களத்தில் எதுவித நிரந்தர பதவியொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கு திணைக்களம் கட்டுப்பட்டில்லை.

9. **சேவை நிபந்தனைகள் :**

(i) கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தில் ஏதேனும் ஒரு நிபந்தனையோ, பல நிபந்தனைகளையோ மீறினால் அவரது நியமனம் உடனடியாக செயற்படும் வண்ணம் முடிவுறுத்தப்படும்.

(ii) புகையிரத பொது முகாமையாளரினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் ஏற்பாடுகளுக்கும் விதிகளுக்கும் பணிந்து நடப்பதற்கு இணங்குதல் வேண்டும்.

10. **பரீட்சைக் கட்டணம்**.- சகல விண்ணப்பதாரிகளும் மீளளிப்புச் செய்யப்படாத ரூபா 300 இற்கான தொகையை புகையிரத பொது முகாமையாளரின் பெயருக்கு செலுத்தப்படும் அலுவலகம் மருதானை, அஞ்சல் அலுவலகம் எனக் குறிப்பிட்டு காசுக்கட்டளையை (Money Order) விண்ணப்பப்பத்திரத்துடன் சேர்த்து இணைத்து அனுப்புதல் வேண்டும். வேறு முறைகளில் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படுவது, விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கான ஒரு காரணமாகும். பூரணப்படுத்தப்படாத அல்லது சரியான முறையிலல்லாத விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள், தமது ஆளடையாளத்தை பரீட்சை நிலையத்தில் நிரூபித்தல் வேண்டும்.

11. **விண்ணப்பிக்கும் முறை**.- தட்டச்சு கடதாசி அளவில் (ஏ-4) விண்ணப்பதாரியினாலேயே விண்ணப்பப்படிவத்தை தயாரித்துக் கொள்ளப்பட வேண்டியதோடு, விண்ணப்பத்தை இட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உப-புகையிரத நிலைய அதிபர் பரீட்சை விண்ணப்பம்-விண்ணப்பிக்கும் புகையிரத நிலையம்" எனக் குறிப்பிடப்பட்டு புகையிரத பொது முகாமையாளர், த. பெ. எண். 355, புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம், கொழும்பு 10 என்ற முகவரிக்கு 2011.01.17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (மாதிரி விண்ணப்பப்படிவம் கீழ்வருமாறாகும்).

12. **விண்ணப்பத்தை உறுதிப்படுத்தல்**.- விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர் ஒருவரினால் அல்லது சமாதான நீதவானொருவரினால்/சத்தியப்பிரமாணத்திற்கான ஆணையாளர் ஒருவரினால்/சட்டத்தரணியினால்/முப்படையின் அதிகாரமுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது வருடத்துக்கு ரூபா 2,37,060 இற்கு குறையாத திரட்டிய சம்பளத்தினைப் பெறும் அரச சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

ஏ. பீ. மஹானாம,
பதில் பொது முகாமையாளர்.

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
கொழும்பு 10,
2010. ..................

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் புகையிரத திணைக்களத்தில்**
**ஒப்பந்த அடிப்படையின்கீழ் உப புகையிரத நிலைய அதிபர் பதவி**

1. விண்ணப்பிக்கும் உப புகையிரத நிலையம் : [ ]

(i) முழுப்பெயர் :----.
(ii) முதலெழுத்துடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
(iii) முதலெழுத்துடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.

2. நிரந்தர முகவரி-

(i) (சிங்களத்தில்/தமிழில்) :----.
(ii) (ஆங்கிலத்தில்) :----.
(iii) (தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :----.
(கையடக்க) :----.

3. பிறந்த திகதி :----.
2011.01.17 ஆந் திகதிக்கு வயது-

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

4. தேசிய அடையாள அட்டை இல. :-

[ | | | | | | | | | ]

5. மாவட்டம் : [ ]

6. பிரதேச செயலாளர் பிரிவு : [ ]

கிராம உத்தியோகத்தர் பிரிவு : [ ]

7. உங்களது நிரந்தர வதிவிடத்தில் இருந்து நீங்கள் விண்ணப்பிக்கும் உப புகையிரத நிலையத்திற்கு உள்ள தூரம் (நேரடி தூரம்) கி. மீற்றரில் தருக :----.

8. கல்வித் தகைமைகள்- க. பொ. த. (சா. த) :

| வருடமும் சுட்டெண்ணும் | பாடங்கள் | சித்தியின் தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

9. வேறு தகைமைகள் :----.

10. நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) :

11. நீர் ஏதேனும் குற்றத்திற்கா நீதிமன்றத்தின் மூலம் தண்டனை பெற்றுள்ளீராயின் அது தொடர்பான விபரங்கள் தருக :----.

12. .......................... தபால் அலுவலகத்திற்கு ரூபா 300 ஐச் செலுத்திப் பெற்றுக்கொண்ட இலக்கம் .......................... உடைய பற்றுச்சீட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
(வேறு முறைகளில் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படுவது விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கான ஓர் காரணமாகும்.)

13. விண்ணப்பதாரியின் வெளிப்படுத்துகை :

(அ) இவ்விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானவையெனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

(ஆ) இவ்விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யான மற்றும் பிழையானவையென என்னை பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்கு முன்னர் தெரியவரின் நான் தகைமையற்றவனாவேன் என்பதுடன் நான் பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பிறகு தெரியவந்தால் எனது சேவையை முடிவுறுத்துவதற்கு நான் கட்டுப்படுவதாகவும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

16. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கும் தேசிய அடையாள அட்டை .................... ஆம் இலக்கத்தைக் கொண்ட .................. அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் அவர் இன்றைய தினம் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(இறப்பர் இலச்சினையைப் பொறிக்கவும்.)

12-601/1

## இரத்மலானை, இலங்கை-ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்துக்கு பயிலுனர்களை சேர்த்துக்கொள்ளல் - 2010 ஆம் ஆண்டு

இரத்மலானை, இலங்கை-ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்துக்கு 2010 ஆம் ஆண்டுக்கான பயிலுனர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. ஆகக்குறைந்த தகைமைகள் :**

(அ) வயது.- 2010.05.31 ஆந் திகதிக்கு 16-25 வருடங்களுக்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள்.- சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களுடன் க. பொ. த. (சா. தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் சித்தியடைந்திருத்தல். 2009.12.31 ஆந் திகதிக்கு முன்னர் கல்வித் தகைமைகளைப் பெற்றிருப்பதும், முதல் தடவையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தலும் அவசியமானதாகும்.

3. **பயிற்சிப் பாடநெறி**.- பயிலுனர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பயிலுனர்களுக்கு கீழ்வரும் தொழில்கள் மற்றும் அத்தொழில்களுக்குரிய கால வரையறைக்கேற்ப, பாடநெறியைப் பயில்வதற்கு இடமளிக்கப்படும். பாடநெறி சிங்கள மொழியில் மட்டும் நடாத்தப்படும்.

| | | |
|---|---|---|
| (i) | டீசல் என்ஜின் இயந்திரவினைஞர் (Mechanic) | 2 1/2 வருடங்கள் |
| (ii) | ஒட்டுனர் (Welder) | 3 வருடங்கள் |
| (iii) | மின்னியல் ஆய்வாளர் (Electrician) (வலு) | 3 1/2 வருடங்கள் |
| (iv) | இயந்திரவினைஞர் (Mechanic) (பொது) | 3 1/2 வருடங்கள் |

4. **விண்ணப்பங்கள்**.- விண்ணப்பதாரியினால் இத்துடன் உள்ள மாதிரிப்படிவத்திற்கேற்ப 297X210 மி. மீ. (A4) அளவிலான வெள்ளைக் கடதாசியொன்றில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களில் பூரணமான விபரங்களை சரியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். தேவையான தகவல்களை பூரணமாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**5. பாடநெறிக்காக தேர்ந்தெடுத்தல் :**

(1) எழுத்துமூல மற்றும் செயல்முறைப் பரீட்சைகள் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் தேவையான ஆகக்குறைந்த தகைமைகளையுடைய மற்றும் 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக் கட்டணம் செலுத்திய விண்ணப்பதாரிகள் மட்டும் எழுத்துமூலப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

(2) எழுத்துமூலப் பரீட்சை கணிதம், அடிப்படைத் தொழில்நுட்ப அறிவு மற்றும் பொது அறிவு அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படும். எழுத்துமூலப் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் அந்தந்த பாடநெறி அடிப்படைக்கமைவாக செயல்முறை/நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(3) எழுத்துமூலம் மற்றும் செயல்முறைப் பரீட்சைகளில் அதிக மொத்தப் புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் அந்தந்த பாடநெறிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவர்.

6. **பரீட்சை மொழி**.- பரீட்சை மொழிகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகும்.

7. இப்பரீட்சைக்காக மீளச்செலுத்தப்படாத ரூபா 500 பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். அக்கட்டணம் மருதானை அஞ்சல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியவாறு **புகையிரத பொது முகாமையாளரின்** பெயருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளை (Money Order) ஒன்று அனுப்பப்படுதல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணத்தை எந்தவொரு அஞ்சல் அலுவலகத்துக்கும் செலுத்த முடியும். அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட காசுக்கட்டளை விண்ணப்பதாரிகளினால் அனுப்பப்படும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். காசுக் கட்டளை இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். சேர்த்துக்கொள்ளப்படும் பரீட்சைக்குத் தோற்றாத தனால் அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக பரீட்சைக் கட்டணம் மீளச்செலுத்தப்படாது எனவும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

8. **பரீட்சை நிலையங்கள்**.- சகல தேவைகளையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகளுக்காக எழுத்துமூலப் பரீட்சையொன்று கொழும்பு நிலையமொன்றில் நடாத்தப்படும்.

9. **ஒப்பந்தங்களைக் கையொப்பமிடல்**.- நிறுவனத்தில் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் சகல விண்ணப்பதாரிகளும் தொழில் குறிப்பிட்ட கால வரையறைக்குள் பயிற்சியைத் திறமையாக பயிலுகின்றனர் என தேசிய பயிலுனர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபையுடன் ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடல் வேண்டும்.

10. பயிற்சி பெறும் காலத்தில் பயிலுனர்களுக்காக தேசிய பயிலுனர் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபை மூலம் மாதாந்த கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

11. பயிற்சிக்குப் பிறகு பயிலுனர்களுக்கு வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொடுக்க திணைக்களம் கட்டுப்பட்டில்லை.

12. கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப விண்ணப்பங்களைத் தயாரித்து, ''பணிப்பாளர், இலங்கை-ஜேர்மன் புகையிரத தொழில்பயிற்சி நிலையம், கல்தெமுல்ல வீதி, இரத்மலானை'' எனும் விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஸ்ரீலஜபுதொபநி/2010'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

13. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி.- விண்ணப்பங்கள் 2011.01.17 ஆந் திகதிவரை ஏற்றுக்கொள்ளப் படுவதுடன், தாமதமாகி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

புகையிரத பொது முகாமையாளர்.

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
இலங்கை புகையிரத சேவை,
கொழும்பு 10.

2010,
B3 - B 80180

**இரத்மலானை, இலங்கை-ஜெர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிலையத்துக்கு பயிலுனர்களை சேர்த்துக்கொள்ளல் - 2010 ஆம் ஆண்டு**

[ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

1. முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
(ஆங்கிலத்தில்) :----.

2. முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
(ஆங்கிலத்தில்) :----.

3. மாவட்டம் :----.

4. பிறந்த திகதி : [ | | | ] [ | ] [ | ]

5. பால் : (ஆண்/பெண்) :----.

6. கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (சா. த).-
முதலாம் வருடம் :----.
சுட்டெண் :----.

| இல. | விடயம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

இரண்டாம் வருடம் :----.
சுட்டெண் :----.

| இல. | விடயம் | தரம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

7. விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி :----.

8. விண்ணப்பம் கோரும் அறிவித்தலின் பிரகாரம் நீங்கள் விரும்பிய இரண்டு தொழில்களை விரும்பிய ஒழுங்கில் குறிப்பிடவும்.

1. ......................... 2. .........................

9\. ................................................ தபால் அலுவலகத்தில்/ புகையிரத நிலையத்தில் ரூபா 500 ஐச் செலுத்திப் பெற்றுக் கொண்ட இல. .................................. உடைய காசுக் கட்டளை/ பற்றுச்சீட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

| காசுக் கட்டளையை பிரித்தெடுக்க முடியாதவாறு இணைக்கவும். |
|---|

10\. மேல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என நான் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது பொய்யானதென தெரிவுசெய்வதற்கு முன்னர் தெரியவருமிடத்து நான் தகைமை யற்றவனாவேன் என்பதுடன் தெரிவுசெய்யப்பட்டதன் பின் தெரியவந்தால் பயிற்சியில் இருந்து நீக்கப்படுவதற்கு கட்டுப் படுவதாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

12-601/2